# குழந்தைக்காக...

விடியுமுன்பே எரிச்சலுடன் வீசத் தொடங்கிய வெய்யில் இப்போது நெருப்பாகச் சுட்டுக் கொண்டிருந்தது.

பஸ் நிலையத்தில் சரவணன் நின்றிருந்தான். பத்து மணிக்குள் அவன் 'பாரிஸ் கார்ன'ரில் உள்ள அந்த ஆபீசில் இருந்தாக வேண்டும் என்ற தவிப்பில் ஏற்பட்ட உணர்வுகளின் இறுக்கம். அம்மா சமையலுக்கு வைத்திருந்த எண்ணெய் அத்தனையையும் தலையில் கவிழ்த்துக் கொண்டு புறப்பட்டி ருந்தான். இருபத்தைந்து பைசா கொடுத்து இஸ்திரி போட்டு அணிந்து கொண்டு புறப்பட்ட சட்டையின் கழுத்தோர மெல்லாம் வியர்வையால் நனைந்தது.

அம்மா வேலை செய்த வீட்டில் எஜமானியின் உபயம் அந்த பாண்ட். இடுப்பு பெரிதாக இருந்ததை சரிப்படுத்தி நூல் திரிந்து ஜாலரா கட்டிய கீழ்ப் பாகத்தை மடித்துத் தைத்து ஒழுங்குபடுத்தி உடுத்திக் கொண்டிருந்தான். இருந்த ஒரே ஒரு கைகுட்டையையும் சோப்புப் போட்டுத் துவைத்து சீராக்கி மடித்து பையில் வைத்திருந்தான். அத்துடன் அந்த சிபாரிசுக் கடிதமும் கொஞ்ச சில்லரையுமாகப் புறப்பட்டிருந்தான்.

எதிரே ஒரு பெரிய கட்டடம். முற்றுப் பெறாத நிலையில், ஆட்கள் துரிதமாக வேலை செய்துகொண்டு இருந்தனர். சும்மாட்டுக்குமேல், இரும்பு சட்டியால் சிமெண்ட் கலவை யுடன் படிகள்மீது ஏறிக்கொண்டிருந்த சிற்றாள் பெண்களைப் பார்த்தபோது அவன் நெஞ்சை என்னவோ அடைத்தது.

அவன் தாயும், ஆரம்பத்தில் சிற்றாள் வேலை செய்து தான் குடும்பத்தைக் காப்பாற்றினாள். இப்போது நோயும்,

வயதும் அவளை வீட்டோடு இருத்திவிட்டன. இருபது வருடம் தொடர்ந்து வேலை பார்த்தாள். அந்தப் பெரிய மனிதர் வீட்டில்... என்ன பயன்? ஆறு மாத காலமாக படுத்த படுக்கை... ஏன் என்று அவர்கள் யாராவது கேட்டு இருப்பார்களா...?

நன்றி, விஸ்வாசம் இதெல்லாம் நாய்க்கு மட்டும் சொந்தமல்ல; வேலையாட்களுக்கும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும், சுயநலவாதிகளிடம் பணம் சிக்கிக் கொண்டு இருக்கும் போது, ஏழைகள் உழைத்து ஓடாகி, குடிசைப் புழுதியிலே பகலில் புழுங்கி, இரவில் கொசுக்களுடன் போராடி, பசி, பட்டினி நோய் என்ற போராட்டத்தில் சாகத் தானே வேண்டும்? நெஞ்சு குமுறியது. பற்களை அழுத்திக் கடித்துக் கொண்டான்.

வெட்கம் இன்றி அம்மா தள்ளாடி எழுந்து போய் எஜமானிடம் வாங்கி வந்த சிபாரிசுக் கடிதம் சட்டைப் பைக்குள் இருந்தபடி அவன் நெஞ்சை உறுத்தியது. கிழித்துப் போட வேண்டும் என்ற துடிதுடிப்பு.

''அது என்ன கட்டடம் இத்தனை பெரிதாக?'' பஸ்சிற்காகக் காத்திருந்த கல்லூரி மாணவி ஒருத்தி தன் தோழியிடம் கேட்டாள். அவன் அவர்களைத் திரும்பிப் பார்த்தான். அடுத்த நாள் சாப்பாட்டைப் பற்றிய கவலை தெரியாத இரண்டு இளசுகள். கல்லூரிப் படிப்பிற்கு கை நிறைய சம்பாதிக்கிற ஒரு அப்பனோ அல்லது அம்மாவோ இருக்கக்கூடிய அதிர்ஷ்டசாலிகள். சிரித்துப் பேச மாட்டார்களா... பறக்கக் கூட தோன்றுமே! உள்ளூர வெகுண்டான்.

''கல்விமீது அவனுக்கும்தான் எத்தனை ஆர்வம் இருந்தது? ஆனால் வாய்ப்பு...? கார்ப்பரேஷன் பள்ளியின் நான்காவது வகுப்பை முடிப்பதற்குள் அவன் அப்பன்



கண்ணை மூடினான். அம்மா வேலை பார்த்த வீடுகளில் அவனைப் படிக்கவா விட்டார்கள்!

''சரவணா! ரொட்டி வாங்கிட்டு வாடா...'' ''பையா தையல் கடையில் தச்சிருக்கிற என் துணிகளை எடுத்து வரியா?...''

அவனும் படித்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற ஆசையில் அம்மா கூட்டிப் பிழைத்த அந்த வீட்டு எஜமானர்கள் அவனைப்பற்றி நினைத்தார்களா? உஹூம் அவனை ஒரு ஏவலாளியாக நினைத்தபோது வேலை வாங்கினார்கள். பலன்... எடுபிடி வேலைக்காக, அவன் இப்போது தெரு நாயாக அலைகிறான். பள்ளிப் படிப்பு, எப்போதோ தலை முழுகி விட்ட சங்கதி.

''இது குழந்தைகள் ஆண்டு இல்லியா? பிரபல காகித வியாபாரி சோமசுந்தரம் வைத்துப் போன 'டிரஸ்ட் பண்டில்' குழந்தைகள் இல்லம்னு ஒண்ணு கட்றாங்க. வருஷக் கடைசிக்குள் கட்டி முடிச்சிடணும்னு அவசரப் படறாங்க,'' கீச்சுக் குரலில் பேசினாள் ஒருத்தி. ''நம்ம காலேஜிலகூட இந்தக் குழந்தைகள் ஆண்டை ஒட்டி ஒரு 'எக்ஸிபிஷன்' நடத்தப் போறாங்களாமே, தெரியுமா?'' கேட்டாள் மற்றொருத்தி.

அவன் வசித்த குடிசைப் பகுதி அருகே ஒரு ரிக்ஷா நிலையம். காலை வேளை சுக்குக் காப்பி வாங்கக் காசு இல்லாவிட்டாலும் ரிக்ஷாக்கார வரதன் காலை தமிழ்ப் பத்திரிகை வாங்கிப் படிக்க மறக்க மாட்டான். வேலை தேடி வெளியே கிளம்பும் அவசரத்திலும், சரவணன் விடவில்லை. இரவலாக அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்து விட்டுத் தான் வந்தான்.

சமூக சேவகி சாரதா அம்மாள் சொன்ன செய்தி அவன் கண்களில் பட்டது. ''முதியோர் கல்வித் திட்டத்திலே நாம் மிக ஊக்கத்துடன் ஈடுபட்டிருக்கிறோம். அதைவிடப் பன் மடங்கு உற்சாகத்துடன் குழந்தைகளின் கல்வியைப்பற்றி நாம் சிந்தித்து செயல்பட வேண்டும். ஏழ்மை, இல்லாமை காரண மாக கல்வி கற்க வாய்ப்பு இன்றி ஒரு குழந்தைகூட திண்டாட நாம் அனுமதிக்கக் கூடாது. குழந்தைக் கல்வியில் நாம் சிரத்தை காட்டினால் வருங்காலத்தில் முதியோர் கல்வி என்ற பிரச்சனைக்கே இடமில்லாமல் போய்விடும்'' ஆணித் தரமான பேச்சு.

ஆறு வயசுக் குழந்தைகளாக குடிசை மண்ணிலே, அவன் புரண்டு விளையாடியபோது, குழந்தைகள் ஆண்டு என்று ஒரு வருடத்தை ஒதுக்கி வைத்த எவருக்குமே தோன்ற வில்லையே ஏன்? சாரதா அம்மாள் போன்ற சமூக சேவகி எவராது 'குழந்தைக் கல்வி' நலனுக்காக கொடி கட்டிக் கொண்டு முன்வரவில்லையே ஏன்? சோமசுந்தரம் போன்ற தொடை வள்ளல் அப்போது மட்டும் ஒரு 'டிரஸ்ட்' ஏற்படுத்த வில்லை ஏன்?

புழுதியில் விழுந்த பூ மாலையாக அவனது குழந்தைப் பருவம் எப்படிப் பாழாகி விட்டது! அடிவயிற்றிலிருந்து கசப்பு குமுறி எழுந்தது. ஆத்திரம் நெஞ்சை எரித்தது. அவனை வெறும் வீணனாகச் செய்த சமுதாயத்தின் மீதே வெறுப்பு பொங்கி வந்தது.

பஸ் வந்து நின்றது. சிந்தனை துண்டிக்கப்பட்டவனாக மூச்சைப் பிடித்துக் கொண்டு பஸ்ஸில் புகுந்து கொண்டான். ஆபீஸ் நேரம், கூட்டம் பஸ்ஸிற்குள் நெருக்கியது. ஒரு கையால் மேல் கம்பியில் தொங்கிய தோல் பட்டையைப் பிடித்தான். தயாராக மறு கையில் பிடித்திருந்த சில்லரையை கண்டக்டரிடம் நீட்டினான். உள்ளங்கையில் எஞ்சிய சில்லரையை இறுக்கமாக மூடிக் கொண்டான்.



அங்கப்ப நாயக்கன் தெருவிலே புதிதாக ஆரம்பித்த கம்பெனி அது. மூன்றாவது மாடிக்கு மூச்சிரைக்க மேலே சென்றதுமே அவனுக்கு விளங்கிவிட்டது. ஆபீஸ் பையன் வேலைக்கு ஒரு பெரிய 'க்யூ.' பி.யு.ஸி. வரை படித்த வாலிபர்கள் முதல், பேட்டிக்கு வந்திருந்தனர். நம்பிக்கை இழந்தாலும் ஒரு சிறு ஆசை, முயன்றுதான் பார்ப்போமே என்று.

பேட்டிக்கு வந்தவர்களை வரிசைப்படுத்தி அனுப்பிய முண்டாசு ஆள் ஸீனியர் ஆபீஸ் பையன் போலும். வந்தவர் களிடம் 'ஸம்திங்' வாங்கிக் கொண்டிருந்தான். சரவணன் முறை வந்தது. வேறு வழியில்லை. அவன் தாய் மகனுக்காக ''வழியில ஏதாச்சும் சாப்பிடு'' என்று திரட்டிக் கொடுத்த சில்லரைகளை அள்ளி அவன் கையில் கொட்டினான்.

அவனது பேட்டி வரும்போது பிற்பகல் இரண்டு மணி. ஏற இறங்க கண்களால் அவனை எடை போட்ட ஆபீஸர் முகம் கடுகடுத்தது. ''நாலு வகுப்புத்தான் படிச்சிருக்கியா?'' அவர் கேட்ட தோரணையே அவனுக்கு முடிவைத் தெரிவித்து விட்டது. கடந்த சில மாதங்களாக வேலை தேடி அலையும் அவனுக்குக் கிடைத்த அதே பதில்தான் பழகிவிட்ட அனுபவம்.

முதல் சில விநாடிகள் அவன் ஏமாற்றத்துடன் அதிர்ந்து போனான். பிறகு சமாளித்தபடி கீழே மடமடவென இறங்கித் தெருவில் நடந்தான். வீடு திரும்ப வேணும் என்ற பரபரப்பு. தாங்க முடியாத பசி வேறு. சட்டைப் பையிலிருந்த அந்த சிபாரிசுக் கடிதத்தை எடுத்து கசக்கி, அருகிலிருந்த குப்பைத் தொட்டியில் போட்டான். பிறகு, 'பாண்ட்' பாக்கெட்டை துழாவினான். ஐந்து பைசா நாணயம்! கோபத்தில் சிரிப்புத்

தான் வந்தது. ''மூட்டைப் பூச்சி மருந்து கூட ஐந்து பைசாவுக்குக் கிடைக்காதே.''

தெருக் குழாயில், கொஞ்சம் நீரை அடித்துப் பிடித்துக் குடித்தான். பாரீஸ் கார்னரின் மறு கோடியிலிருந்த அவர்கள் குடிசைக்கு இப்போது அவன் நடந்தே சென்றாக வேண்டும்.

வயிற்றைச் சுருட்டும் பசி. மண்டையைப் பிளக்கும் வெயில். பாதி வழி நடந்து வந்து விட்டான். கால்கள் மேலே நடக்க மறுத்தன. பசி காதை அடைக்க, அருகிலிருந்த பஸ் நிலையத்தில் சற்று நின்றான். அப்போதுதான் பார்த்தான். கிழிந்த சேலையும் அழுக்கு ரவிக்கையுமாக ஒரு பெண். இடையில் மூன்று வயதுக் குழந்தையுடன் பஸ்ஸிற்காகக் காத்திருந்தாள். ஒரு ஓரமாக நடைபாதை பலகாரக் கடையில் மூங்கில் தட்டில் ஆப்பமும், வடையும் ஈக்கள் சகிதம் கண்ணைக் கவர்ந்தன.

சரவணன் எச்சிலை விழுங்கினான். அவனைப் போலவே குழந்தைக்கும் கோரப் பசி போலும். ''அம்மா, ஆப்பம்...'' ஓலமிட்டது!

''ஊட்டுக்குப் போயி தயிர்சோறு போடறேன் கம்னு கிட'' தாயார் தாஜா செய்தாள். குழந்தை கேட்பதாயில்லை.

''பசிக்குதும்மா... ஆப்பம் வேணும்.. ஒண்ணே ஒண்ணு'' விம்மியது குழந்தை. கை காலை உதைத்துக் கொண்டு அடம் பிடித்தது.

பொறுக்க முடியாதவளாய் குழந்தையைக் கீழே இறக்கி விட்டு இடையில் சொருகியிருந்த சுருக்குப் பையைத் திறந்து துழாவினாள். அவளது விரல் இடை வழியே நழுவி கீழே விழுந்து உருண்டு ஓடியது ஒரு ரூபாய் நாணயம்.



''சனியன்! உம் பேரைச் சொன்னதே, துட்டு கூட தாரை வாந்திடுச்சு. பேஜாரு பிடிச்ச கயிதை! ஊட்டுக்கு வா செமத்தியா நாலு சாத்து சாத்தறேன்'' திட்டியபடி, ரூபாய் ஓடிய திசை நோக்கி தேட ஆரம்பித்தாள்.

சரவணன் நெஞ்சு திகிலில் அடித்துக் கொண்டது. அவனது காலடியில் விழுந்து கிடந்தது முழு ரூபாய்... அவன் நாவிலே நீர்... சட்டென மனசாட்சியை அமுக்கியபடி, அந்தப் பெண் அருகே வருமுன், வலது காலால் ரூபாயை அழுத்திக் கொண்டு எங்கேயோ பார்த்தபடி நின்றான்.

''ஒரு ரூபாய் வியுந்துட்டுது ஐயா... எங்கிணாச்சும் கண்டியா?'' அழுகையோடு கேட்டாள் அவள்.

இல்லை என்று தலையை ஆட்டினான் சரவணன் — இங்குமங்கும் தேடிக் காணாமல் சினத்துடன் சீறிய தாய், குழந்தை முதுகில் ஓங்கி அறைந்துவிட்டு, 'நக்'கென்று தூக்கி வைத்துக் கொண்டு நடந்தாள். 'ஓ'வென அலறிய குழந்தையின் குரல் வெகு தொலைவில் தேய்ந்து கொண்டே போயிற்று. அதற்குள் ஒரு பஸ் வந்து நின்றது. இறங்கிய கூட்டத்தின் நெரிசலில், சாமர்த்தியமாகக் குனிந்து காலடியில் கிடந்த ரூபாயை எடுத்தான் சரவணன்.

எவராவது அவன் செய்ததைப் பார்த்து விட்டால்... வடை, ஆப்பம் ஆசையை கைவிட்டு வேகமாக மேலே நடந்தான். எங்கேயாவது டீக்கடையில் பன்னும் டீயும் சாப்பிடலாம். உற்சாகம் சோர்வை மறக்கடித்தது.

காலையில் அவன் கிளம்பிய பஸ் நிலையம். முற்றுப் பெறாத கட்டடத்தின் முன் பக்கம். அவன் திடுக்கிட்டான். அதே குழந்தையும் தாயும் நடைபாதை அருகே நின்று

இருந்தனர். சிற்றாள் பெண் ஒருத்தி ஒரு தகரக் குவளையில் அவர்களுக்குக் குடிக்க நீர் வார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னா பொம்பிளை? பசிக்குதுன்னு அழுதா. பச்சைப் பூவாட்டம் பிள்ளை, அதை அடிக்கிறியே... உம்! தண்ணீரைக் குடு'' அதட்டினாள் சிற்றாள் பெண். தண்ணீரை மடக்கென்று வாங்கிக் குடித்த குழந்தையின் கண்கள் அழுதழுது சிவந்திருந்தன.

''ஆமா? கோவம் வராதாங்காட்டியும், சவாரிக்கு வச்சிருந்த துட்டு, தாரைவாந்துபுடிச்சு - நான் என்னா செய்வேன். வெய்யில்லே இதையும் சுமந்துகிட்டு, பசியோட நடந்தேன்'' என்றாள் தாய் கண் கலங்கியபடி.

சரவணன் தவித்துப் போனான். நெஞ்சில் நெருப்புக் கொட்டிய வேதனை. ''சே! எத்தனை மட்டமாக நடந்து விட்டோம்.'' வெட்கம் அந்தப் பக்கம் பார்க்க முடியாதபடி தடுத்தது. குற்ற உணர்வு அவனை மேலே நடக்க விடவில்லை. மனசாட்சி கனமாக பாறாங்கல்லாக அவனை அமுக்கியது. எதிர்புறமாக அந்தத் தாய் குழந்தையுடன் வேகமாக நடப்பதைக் கண்டான்.

திடீரென ஒரு யோசனை சட்டென குறுக்கே நடந்து எதிர் சாரியை அடைந்தான். 'அம்மா! அம்மா'' கை தட்டினான். அவள் நின்றாள்.

''பஸ் நிலையத்தில் ரூபாயைத் தொலைச்சிட்டு தேடின வங்க...''

''ஆமாம். ஏன் கேக்குறீங்க?''



''நீங்க போன பிறகு நானும் விடாம தேடினேன். ஒரு இலைச் சருகுக்கடியில் கிடந்தது. இந்தாங்க'' ரூபாயை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''மவராசனா இருக்கனும் தம்பி! இந்தக் குயந்தைக்கி ஒரு இட்லி வாங்கி ஊட்றேன். பசியால செத்துப் பூடும் போல இருக்குது'' கண்கள் பனிக்க நன்றியுடன் அவள் கூறியபோது சரவணன் கூனிக் குறுகிப் போனான்.

வயிறு பசியால் முறுக்கிய போதும், நெஞ்சிலே இது வரை முறுக்கிய குற்ற உணர்வு மறைந்து விட்டது. மனம் லேசாகி நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

குழந்தைகள் ஆண்டிலே செய்ய வேண்டியதைப்பற்றி சமூக சேவகி சாரதா திட்டங்கள் தீட்டட்டும். சோமசுந்தரம் டிரஸ்ட் நிர்வாகிகள் குழந்தைகள் இல்லம் கட்டட்டும். ஆனால் அவனும் அந்த ஆண்டிற்கு ஒரு மகத்தான காரியத்தைச் செய்து விட்டிருக்கிறானே!

மனிதர் உணவை மனிதர் பறிக்கும் காலத்தில் அந்தக் குழந்தையின் உணவைத் தட்டிப் பறிக்க மனமின்றித் திருப்பிக் கொடுத்து விட்டானே. இது மாபெரும் தியாகமில்லையா? முற்றுப் பெறாத கட்டடத்தைப் பார்த்துப் புன்முறுவலித்தபடியே வீடு திரும்பினான்.

★ ★ ★